## பதிப்புரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்)அவர்கள் மீதும், அவர்களின் தோழர்கள், துயர்ந்தோர் அனைவர் மீதும் மறுமை பரியந்தம் உண்டாவதாக!

தினசரிப்பாடங்கள் என்ற இந்நூலை வெளியிடுவதில் ஜம்இய்யதுஷ்ஷபாப் நிறைவும், மகிழ்வும் அடைகின்றது. சத்திய இஸ்லாத்தை தூய வடிவில் மக்கள் விளங்கிச் செயற்பட வேண்டும் என்ற நன்நோக்கில் ஷபாப் பல வேலை செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறது. அறிவுத்தேடல் இல்லாத சமூகம், இருண்ட வனாந் திரத்தில் திக்கெற்று தவிக்கும் மனிதனுக்கொப்பானது. இத்தகைய இருண்ட யுகத்தை நோக்கி நமது சமூகம் திட்டமிட்டு நகர்த்தப்படுகிறது.

மேற்கத்தைய மீடியாக்களின் நெறிப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தீனை பின்பற்றுவதை விட்டும் சமூகத்தை அந்நியப்படுத்தி விட்டது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஷபாப் அறிவுத்தேடலை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறது.

தெரு பயான், ஒரு நாள் சன்மார்க்க ஒன்று கூடல், பெண்களுக்கான தனி நிகழ்ச்சிகள், காலத்திற்கேற்ற பிரசுரங்கள், நூல் வெளியீடுகள், பிரபல மார்க்க அறிஞர்களின் ஒலி நாடாக்கள், குறுவட்டுகள் (CD), இளைஞர்பயிற்சிப்பாசறைகள், மாணவர்களுக்கான தர்பிய்யா நிகழ்ச்சிகள், போன்ற செயற்திட்டங்கள் ஷபாபினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தொடரில் தான் இந்நூலை உங்கள் கரங்களில் தருகின்றோம். இத்தகைய வெளியீடுகள் மூலம் புனித குர்ஆன், நபி மொழி, இஸ்லாமிய வரலாறு போன்ற துறைகளை தேடிப்படிக்கும் ஆர்வத்தை ஷபாப் மக்கள் மனங்களில் விதைத்து வருகின்றது. எமது முயற்சியின் பலனாய் ஆய்வும் அறிவுப்பசியும் கொண்ட பலர் உருவாகியுள்ளனர்.

இலத்திரனியல் ஊடகங்கள் வாசிப்பு பழக்கத்தை மறக்கடிக்கச் செய்து விட்டன. இஸ்லாத்தின் கொள்கை அதன் விழுமியங்களை கருத்தூன்றிப்படிக்கும் சமூகத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற இலக்கில் தான் இவ்வாறான வெளியீடுகள் வெளிக் கொணரப்படுகின்றன. இந்நூல் மூலம் இஸ்லாத்தின் அடிப்படை விமியங்கள் அறிமுகமாகின்றன. அவை உங்கள் மனங்களில் பதிந்து அமல்களில் பிரகாசிக்க வேண்டும் என்பது எமது பேரவா இந்நூலை மீள்பதிப்புச் செய்ய அனுமதி வழங்கிய ஜுல்பி வெளிநாட்டவர் அழைப்பு மையம் சவூதி அரேபியா தஃவா நிலையத்திற்கு ஷபாப் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

வாசித்து செயற்படின் இகபரத்திலும் நன்மைகளை அடைந்து கொள்வீர்கள் இன்ஷா அல்லாஹ்.

**-அஷ்ஷெய்க் எம். எஸ்.எம். ரஷீத்(ரியாதி)**

**முகாமைத்துவப்பணிப்பாளர்**

**21.09.05**

# பொருளடக்கம்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நேரங்களைப் பேணல் | 3 | 32 | மழை-சில சட்டங்கள் | 46 |
| 2 | தாயத்து அணிதல் | 4 | 33 | இஸ்திகாரா | 48 |
| 3 | ஜோதிடன், குறிகாரன் | 6 | 34 | அநாதை பராமரித்தல் | 50 |
| 4 | சூனியம் | 7 | 35 | அநாதையின் பொருள் | 51 |
| 5 | ஓதிப்பார்த்தல் | 9 | 36 | ஒருவர் யாரை நேசி.. | 52 |
| 6 | சத்தியம் செய்தல் | 10 | 37 | உருவங்கள் | 53 |
| 7 | சகுணம் பார்த்தல் | 11 | 38 | கனவுகள் | 54 |
| 8 | தவக்குல் | 12 | 39 | கனவின் ஒழுக்கம் | 55 |
| 9 | துஆ ஏற்கப்படும் நேரம் | 13 | 40 | விருந்தை ஏற்பது | 57 |
| 10 | ஜமாஅத் தொழுகை | 15 | 41 | அனுமதி பெறுதல் | 58 |
| 11 | ஜமாஅதின் சிறப்பு | 17 | 42 | இப்லீஸின் குழப்பம் | 59 |
| 12 | பள்ளிக்கு வரும் முறை | 18 | 43 | மோசடி | 60 |
| 13 | தொழுகைக்கு விரைத | 19 | 44 | ஏமாற்றுதல் | 61 |
| 14 | காணிக்கைத் தொழுகை | 20 | 45 | கோபம் | 62 |
| 15 | முதல் வரிசையின் சிறப் | 21 | 46 | கப்ரு ஸியாரத் | 63 |
| 16 | வரிசைகள் சரிசெய்தல் | 22 | 47 | மது அருந்துதல் | 65 |
| 17 | ஜமாஅத்துடன் பஜ்ரு | 24 | 48 | வீண் தர்க்கம் | 66 |
| 18 | அஸரின் சிறப்பு | 25 | 49 | மரம் நடுதல் | 68 |
| 19 | இரவுத் தொழுகை (1) | 27 | 50 | வியாபாரம்-சட்டங்கள் | 69 |
| 20 | இரவுத் தொழுகை (2) | 28 | 51 | பொய்ச் சத்தியம் | 71 |
| 21 | நபில் தொழுகை | 30 | 52 | பொய் சாட்சி | 72 |
| 22 | ஜும்ஆ நாளின் சிறப்பு | 31 | 53 | சபித்தல் | 73 |
| 23 | ஜும்ஆவுக்கு சீக்கிரம்... | 32 | 54 | கவிதை | 74 |
| 24 | ஜும்ஆ நாள் சுன்னத்து | 34 | 55 | ஹராமான வார்த்தை | 75 |
| 25 | பெருநாள் தொழுகை (1 | 35 | 56 | ஜிஹாதின் சிறப்பு | 76 |
| 26 | பெருநாள் தொழுகை (2 | 37 | 57 | போராளி, ஷஹீத் | 78 |
| 27 | பெருநாள் தொழுகை (3 | 38 | 58 | ஜிஹாதில் நபித்தோழர் | 80 |
| 28 | குர்பானி கொடுத்தல் | 38 | 59 | முஸ்லிமின் தேவை... | 83 |
| 29 | கிரகணத் தொழுகை | 40 | 60 | பின்பற்றல், பித்அத் | 85 |
| 30 | மழை வேண்டுதல் | 41 | 61 | ஸலவாத்தின் சிறப்பு | 87 |
| 31 | மழைத் தொழுகை | 43 | 62 | கடனாளிக்கு அவகாசம் | 88 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 63 | வட்டி | 90 | 82 | அடக்கம் செய்தல் | 114 |
| 64 | திருக்குர்ஆன் சிறப்பு | 91 | 83 | கப்ரை சமப்படுத்தல் | 115 |
| 65 | பகரா, ஆலுஇம்ரான் | 92 | 84 | கப்ரில் நடப்பதென்ன? | 116 |
| 66 | இறைவழியில் செலவு | 93 | 85 | பொறுமை | 117 |
| 67 | தர்மத்தின் சிறப்பு (1) | 95 | 86 | மரண சாசனம் | 119 |
| 68 | தர்மத்தின் சிறப்பு (2) | 97 | 87 | வாரிசுமைச் சட்டங்க | 121 |
| 69 | சிறந்த தர்மம் | 97 | 88 | இறந்தவருக்கு அழுதல் | 122 |
| 70 | இரகசிய தர்மம் | 99 | 89 | குழந்தை இழப்பை | 123 |
| 71 | பகிரங்க தர்மம் | 100 | 90 | மஸ்ஜித் ஹராம்,நபவீ | 124 |
| 72 | யாசித்தல், யாசிக்காமை | 102 | 91 | மக்காவுக்குரிய சட்டம் | 125 |
| 73 | ஹராமான வார்த்தை | 103 | 92 | மணமுடிக்க நிர்பந்தம் | 126 |
| 74 | மரணம்-நினைவு, ஆசை | 104 | 93 | ஒற்றுமை | 127 |
| 75 | மரணவேளை | 105 | 94 | அமானிதம் பேணல் | 129 |
| 76 | செயல்களின் கணிப்பு | 105 | 95 | தஃவாவின் சிறப்பு | 130 |
| 77 | ஜனாஸா தொழுகை (1) | 107 | 96 | வரம்பு மீறிப் புகழ்தல் | 132 |
| 78 | ஜனாஸா தொழுகை (2) | 108 | 97 | இசை | 133 |
| 79 | ஜனாஸாவில் கலந்தல் | 110 | 98 | துல்ஹஜ் 10 நாட்கள் | 134 |
| 80 | ஜனாஸா தொழுகை (3) | 111 | 99 | இறைவனின் மகிமை | 135 |
| 81 | ஜனாஸா-சட்டங்கள் | 112 | 100 | அதிகம் சிரித்தல் | 137 |

பொருள் மதிப்புமிக்கதாகும். அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் பொருள் சொர்க்கமாகும்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: திர்மிதி (2567)

__பயன்கள்:__

1. பயனுள்ள வழிகளில் நேரங்களைப் பேணுவது அவசியம்.
2. மனிதன் தன் நேரங்கள் பற்றி விசாரிக்கப்படுவான்.
3. பெரும்பாலோர் நேரத்தை வீணடிக்கிறார்கள் அதை அலட்சியம் செய்கிறார்கள்.

## 2. தாயத்து அணிவதன் சட்டம்

❑ (நபியே! இவர்களிடம்) நீர் கேளும்! அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைக்கும் தெய்வங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அல்லாஹ் எனக்கு ஏதேனும் தீங்கு இழைக்க நாடினால் அந்தத் தீங்கிலிருந்து அவை என்னைக் காப்பாற்றிவிடுமா? அல்லது அல்லாஹ் என் மீது கருணை பொழிய நாடினால் அந்தத் தெய்வங்களால் அவனது கருணையைத் தடுத்து நிறுத்த முடியுமா? (இவர்களிடம்) நீர் கூறிவிடும்! எனக்கு அல்லாஹ்வே போதுமானவன், நம்பிக்கை வைப்பவர்கள் அவன் மீதே நம்பிக்கைவைப்பார்கள். (39:38)

❑ யார் தாயத்து அணிந்து கொண்டாரோ அவருக்கு அல்லாஹ் நிறைவைத் தரமாட்டான் என்பது நபிமொழி. மற்றொரு அறிவிப்பில் யார் தாயத்து அணிந்து கொண்டாரோ அவர் இணைவைத்து விட்டார்.

அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ரழி) நூல்: அஹ்மத்

கொண்டு 'பொய் சாட்சி கூறுவதும்தான்' என்றனர். நிறுத்தமாட்டார்களா என்று நாங்கள் சொல்லுமளவுக்கு இதை திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

நூல்: புகாரி (5975) முஸ்லிம், திர்மிதி (5008)

பயன்கள்:

1. பொய் சாட்சி சொல்வது கொடிய ஹராமாகும்.
2. இது மிகப்பெரும் பாவமாகும். ஏனெனில் இதில் பொய் கலந்திருக்கிறது. இது முஸ்லிம்களுடைய உரிமைகளைப் பாழ் படுத்துவதாகவும் இருக்கின்றது.

## 53. சபித்தல்

- ஒரு முஃமினை சபிப்பது அவனைக் கொலை செய்வது போலாகும். (நபிமொழி) அறிவிப்பவர்: லஹ்ஹாக் (ரழி)
  நூல்: புகாரி (6652) முஸ்லிம்
- அதிகம் சபிப்பது உண்மையானவனுக்கு அழகல்ல என்பது நபிமொழி. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) முஸ்லிம்.
- அதிகம் சபிப்பவர்கள் மறுமை நாளில் பரிந்துரை செய்பவர்களாகவோ ஷஹீதுகளாகவோ இருக்க மாட்டார்கள். (நபிமொழி) அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம்.
- ஒரு முஃமின் குறைகூறத் திரிபவனாகவோ, சபிப்பவனாகவோ, அநாகரீகமாக நடப்பவனாகவோ, அசிங்கமாகப்பேசுபவனாகவோ இருக்க மாட்டான். (நபிமொழி)
  அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரழி) நூல்: திர்மிதி (2043)
- ஒரு அடியான் ஏதாவது ஒரு பொருளை சபித்தால் அந்த சாபம் வானத்தை நோக்கி உயரும் அப்போது வானத்தின் வாசல்கள் அடைக்கப்படும். பிறகு அந்த சாபம் பூமியை நோக்கி

என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி) நூல்: முஸ்லிம், திர்மிதி (3068)

**பயன்கள்:**

1. திருக்குர்ஆன் ஓதுவதற்கு சிறப்பு உண்டு.
2. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு நன்மை உண்டு.
3. திறமையாக ஓதக்கூடியவர் சொர்க்கத்தில் வானவர்களுடன் இருப்பார்.
4. சிரமப்பட்டு ஓதுபவருக்கு இரண்டு கூலி உண்டு.

## 65. பகரா, ஆலுஇம்ரானின் சிறப்பு

- உங்கள் வீடுகளை மண்ணறையாக்கிவிடாதீர்கள். எந்த வீட்டில் சூரத்துல் பகராஅ ஓதப்படுகிறதோ அங்கிருந்து நிச்சயமாக ஷைத்தான் வெருண்டோடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூல்: முஸ்லிம், திர்மிதி (3037)
- திருக்குர்ஆனை ஓதுங்கள் நிச்சயமாக அது தன்னை ஓதியவருக்கு மறுமையில் பரிந்துரை செய்யக்கூடியதாக வரும். மிக அழகிய, வெண்ணிறம் கொண்ட இரண்டு அத்தியாயங்களை ஓதுங்கள். அவை பகரா, ஆலுஇம்ரான் ஆகும். ஏனெனில் அவ்விரு அத்தியாயங்களும் மறுமையில் மேகங்களைப் போன்று அல்லது நிழல்தரும் குடைபோன்று வரும் அல்லது அவ்விரு அத்தியாயங்களும் சிறகடிக்கும் இரு பறவைக் கூட்டம்போல் வரும். அவற்றை ஓதியவர்களுக்காக அவை வாதாடும். சூரத்துல் பகராவை ஓதுங்கள். அதை ஓதுவது பரக்கத்தாகும் அதை (ஓதாமல்) விட்டு விடுவது நஷ்டமாகும். அந்த பரக்கத்தை அடைவதற்கு வீணர்களால் முடியாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஉமாமா (ரழி) நூல்: முஸ்லிம்

காக நன்றி செலுத்தினால் அதுவும் அவனுக்கு நன்மை தான். இப்படி முஃமினைத் தவிர வேறெவனுக்கும் கிடைக் காது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: சுஹைப் (ரழி) நூல்: முஸ்லிம்

பயன்கள்:

1. துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதற்கு சிறப்பு உண்டு.
2. துன்பம் ஏற்பட்ட உடனேயே மேற்கொள்ளக்கூடிய பொறு மைதான் புகழுக்குரியது.
3. கஷ்ட நேரங்களில் பொறுமையை மேற்கொள்வது முஃமின் களின் பண்பாகும்.
4. துன்பம் ஏற்படும்போது ஹதீஸில் வந்துள்ள திக்ரைக் கூறு வது சிறந்தது.

## 86. மரண சாசனம்

❑ மரண சாசனம் செய்ய ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றி ருக்கும் எந்த ஒரு முஸ்லிமுக்கும் அவர் தனது மரண சாச னத்தை எழுதித் தன்னிடம் வைத்திருக்காமல் இரண்டு இர வுகள் கூட கழிப்பதற்கு அனுமதி இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி)

நூல்: புகாரி (2738), முஸ்லிம், திர்மிதி (981)

❑ அல்லாஹ்வின் தூதரே! நான் வசதியுடையவராக இருக் கின்றேன். என்னுடைய ஒரே மகளைத் தவிர வேறு எவரும் எனக்கு வாரிசாக இல்லை. என் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கை நான் தர்மம் செய்யலாமா? என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூடாது என்றார்கள். பாதி யைத் தர்மம் செய்யலாமா? என்று கேட்டேன். அதற்கும் கூடாது என்றே கூறினார்கள். மீண்டும் நான் மூன்றில் ஒரு

அது அல்லாததைக் காண்பவர்கள் தன்னைத் தவிரவேறு எவரையும் குறை கூற வேண்டாம் என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர் (ரழி) நூல்: முஸ்லிம்.

பயன்கள்:

1. அல்லாஹ்வின் மகத்துவமும் அவனது விசாலமான ஆட்சியும் விவரிக்கப்பட்டுள்ளது.
2. அவன் வல்லமை, மாபெரும் ஆற்றல் மற்றும் படைப்பினங்களை விட்டும் அவன் பரிபூரணமான முறையில் தேவையற்றிருப்பது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.
3. நேர்வழிக்கும் வாழ்க்கை ஆதாரத்திற்கும் மன்னிப்புக்கும் படைப்பினங்கள் அவன் பால் மிகுந்த தேவையுடையவர்களாக இருக்கின்றார்கள்.

## 100. அதிகம் சிரித்தல்

- அதிகமாக சிரிக்காதீர்கள். அதிகமாகச் சிரிப்பது இதயத்தைப் பாழ்படுத்திவிடும் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: அஹ்மத்
- நபி(ஸல்)அவர்கள் தம் கடவாய்ப் பற்கள் தெரியுமளவுக்கு சிரித்ததை நான் ஒருபோதும் பார்த்தது கிடையாது. அவர்கள் சிரித்ததெல்லாம் புன்னகைதான்.

  அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல்: புகாரி (6092)
- உன் சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்னகை புரிவது உனக்கு நல்லறமாகும். நீ நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் உனக்கு நல்லறமாகும். பாதை தவறிய மனிதருக்குப் பாதையைக் காட்டுவதும் உனக்கு நல்லறமாகும். பார்வை இழந்தவருக்குப் பார்வையாக நீ ஆவதும்

